SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்

பிப்ரவரி - 2018

# ZERO CURRENT AFFAIRS

## TNPSC GROUP II

**0%** Effort | **100%** Results

www.tnpscthervupettgam.com

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy.

# பிப்ரவரி - 2018

## தமிழ்நாடு

**1)** காவிரி நதிநீர் விவகாரத் தீர்ப்பு : **பிப்ரவரி 16, 2018**

- கர்நாடகம் - 284.75 டி.எம்.சி (பெங்களூருக்கான நீர்த்தேவையான 4.75 டி.எம்.சி-யும் சேர்த்து)
- தமிழ்நாடு - 404.25 டி.எம்.சி
- கேரளம் - 30 டி.எம்.சி
- புதுச்சேரி - 7 டி.எம்.சி

2) ஜல்லிக்கட்டுக்கான அரசியலமைப்பு அமர்வு : உச்சநீதிமன்றமானது அரசியலமைப்பு விதி 29(1)-ன்படி, தமிழகத்தின் கலாச்சார அடையாளமான ஜல்லிக்கட்டினைப் பாதுகாக்க வேண்டி இவ்விவகாரத்தினை **2018 பிப்ரவரி 02** அன்று ஐந்து உறுப்பினர்களை கொண்ட அரசியலமைப்பு அமர்விற்குப் பரிந்துரைத்தது.

3) 'மெட்ரோ நீர்' அமைப்பின் தலைவரான **சத்யபிரதா சாஹூ**, 2018 பிப்ரவரி 23, அன்று தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரியான ராஜேஷ் லக்கானிக்குப் பதிலாகப் பொறுப்பேற்க உள்ளார்.

4) **M.A. சித்திக் குழு** : இது தமிழகத்தில் ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்தவும், அது தொடர்பான சிக்கல்களைத் தீர்க்கவும் அமைக்கப்பட்டுள்ளது.

5) தமிழகத்தின் அரசுப் பள்ளிகளில் **ஸ்மார்ட் வகுப்பறைகளை மைக்ரோசாஃப்ட் நிறுவனம்** தொடங்க இருக்கிறது.

6) தமிழகத்தில் அம்மா இரு சக்கர வாகனத் திட்டம் 2018 **பிப்ரவரி 24**, அன்று பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டம் தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் 70வது பிறந்தநாளையொட்டி தொடங்கி வைக்கப்பட்டது.

7) தமிழக முன்னாள் முதல்வர் **ஜெ. ஜெயலலிதா அவர்களின் உருவப்படம்** தமிழ்நாடு **தலைமைச் செயலகத்தில்** 2018 பிப்ரவரி 12 அன்று சபாநாயகர் திரு. தனபால் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

8) **தீன் தயாள் உபாத்யாய் பஞ்சாயத்து சஷாக்திகரன் புரஸ்கார்** -2018ன் கீழ் தமிழ்நாட்டின் சிறந்த ஊராட்சியாக இராமநாதபுரத்திலுள்ள புதுமடம் கிராம ஊராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

9) **JITO கருத்தரங்கு : சர்வதேச சமண வர்த்தக** அமைப்புக்கான கருத்தரங்கினை தமிழக முதல்வர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் 2018 **பிப்ரவரி** 23 அன்று தொடங்கி வைத்தார்.

10) **STAR 2.0** : எளிமையான மற்றும் வேகமான முறையில் பத்திரப்பதிவு செய்வதற்கு 'எளிய மற்றும் வெளிப்படையான பதிவு செய்தலுக்கான நிர்வாகம் 2.0' **(Simplified and Tranparent Administration of Registration 2.0)** எனும் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் 2018 **பிப்ரவரி** 12, அன்று **www.tnreginet.gov.in** எனும் வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

11) **உலக முதலீட்டாளர்கள் மாநாடு** : இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019-ம் ஆண்டு ஜனவரி 23 மற்றும் 24-ம் தேதிகளில் சென்னையில் நடைபெற உள்ளது. முதல் மாநாடு 2015-ல் நடைபெற்றது.

12) **பசுமை வழிச்சாலை : சேலம் – சென்னை** நகரங்களுக்கு இடையே **எட்டு வழிச்சாலை** அமைக்கப்பட இருக்கிறது.

13) பழங்காலத்தில் இரும்பு பயன்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் **விழுப்புரம் மாவட்டத்திலுள்ள ரிஷிவந்தியத்தில்** கிடைக்கப் பெற்றுள்ளன.

14) மூன்றாம் நூற்றாண்டில் பயன்பாட்டில் இருந்ததாகக் கருதப்படும் செக்காட்டும் கல் (Chekku Stone) **ஈரோடு மாவட்டத்திலுள்ள தாளவாடியில்** கண்டெடுக்கப்பட்டுள்ளது.

15) **கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில்** 2018 பிப்ரவரி 9 முதல் **'நீரா'** எனும் போதைத் தன்மையற்ற இனிப்புத் தன்மைக் கொண்ட கள் விற்பனை தொடங்கப்பட்டுள்ளது. இப்பானம் தென்னை மற்றும் பனை மரங்களிலிருந்து எடுக்கப்படுகிறது.

16) **சென்னை அறிவியல் திருவிழா** 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி 21 முதல் 24 வரை **'சென்னை அறிவியல் நகரத்தில்'** நடைபெற்றது. இதன் **கருத்துரு** "அனைவருக்கும் ஆரோக்கியம்" **(Health for All)**.

17) பட்டு நெய்தலுக்கான தேசிய விருதினை காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பெண் பட்டு நெசவாளர்கள் பெற்றுள்ளனர்.

18) 2018 பிப்ரவரி 3 அன்று டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தின் பெயர் மாற்றப்பட்டது.

- சாணக்யபுரியிலுள்ள கவுடில்யா மார்க்கம் **எண் – 6** ஆனது **வைகை தமிழ்நாடு இல்லம்** என மாற்றப்பட்டது
- சாணக்யபுரியின் **எண்–9** பிர் நிகேந்திரஜித் மார்க்கம் ஆனது **பொதிகைத் தமிழ்நாடு இல்லம்** என மாற்றப்பட்டது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

19) 2018 பிப்ரவரி 2 அன்று **காவலர்களின் சீருடையில் புகைப்படக் கருவி** (Camera) பொருத்தும் பணி சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது.

20) **இணைய சாதி (Internet Saathi) : கூகுள் மற்றும் டாடா** அறக்கட்டளை இரண்டும் இணைந்து, தமிழ்நாட்டின் கிராமங்களில் இணையம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளன.

21) **கோடா மற்றும் தோடா** ஆகிய தமிழகத்தின் **தென் திராவிட மொழிகள்** அழியும் நிலையில் உள்ளன.

22) நீதி ஆயோக் வெளியிட்டுள்ள **'ஆரோக்கியத்துக்கான குறியீட்டில்' (Health Index)** முதல் இடத்தில் கேரளாவும், **மூன்றாவது இடத்தில் தமிழ்நாடும்** உள்ளன. உத்திரப்பிரதேசம் இறுதி இடத்தைப் பெற்றுள்ளது.

23) முதலாவது **'பாதுகாப்புத் தொழிற்சாலை உற்பத்தி வழித்தடம்' (1st Defence Industrial Production Corridor)** ஆனது **சென்னை மற்றும் பெங்களூரு, கோயம்புத்தூர்** மற்றும் தமிழகத்தின் முக்கியப் பகுதிகள் வழியாக இணைக்கும். இதனை பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் மத்திய பட்ஜெட் மூலமாக தமிழகத்தில் ஏற்படுத்தப்படவுள்ளதாக கூறினார்.

24) **'தமிழக மரக்களஞ்சியம் செயலி'** : இந்த அலைபேசிச் செயலியானது மரங்கள் மற்றும் காடு வளர்ப்பினைப் பற்றிய தகவல்களை அளிக்கின்றது.

25) தமிழ்நாட்டின் முதலாவது முதல்வரான ஓமந்தூர் P. இராமசாமி ரெட்டியார் அவர்களின் பிறந்த தினத்தை **முதன்முதலாக அரசு விழாவாகக்** கொண்டாட தமிழக அரசு முடிவெடுத்துள்ளது.

26) **தமிழக அரசும் மைக்ரோசாஃப்ட்** நிறுவனமும் இணைந்து பள்ளிக் கல்விக்கான **திரள் தொழில்நுட்பத்தை** (Cloud technology) உருவாக்கி உள்ளன.

27) **உலகத் தமிழ் சங்க நூலகம்** : இந்நூலகம் ஆனது **மதுரை, உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில்** அமைக்கப்பட உள்ளது.

28) **காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம்** : காங்கேயம் மாட்டினத்தைப் பேணிகாக்க ரூ. 5 கோடி செலவில் **ஈரோடு மாவட்டத்தின் பவானிசாகர் அருகேயுள்ள கொத்தமங்கலம்** பஞ்சாயத்திற்குட்பட்ட **பகுத்தாம்பாளையத்தில்** காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

## தேசம்

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

1) **N. கோபாலசுவாமி குழு : பல்கலைக்கழக மானியக் குழு (UGC)** ஆனது அதிகாரமிக்க நான்கு பேர் கொண்ட நிபுணர் குழுவினை இவரின் தலைமையில் அமைத்துள்ளது. இக்குழு 20 **சிறப்பு வாய்ந்த பல்கலைக்கழக**ங்களைப் (Institutions of Eminence) பட்டியலிடுவதற்காக, பல்கலைக்கழகங்களின் விண்ணப்ப படிவங்களை மதிப்பீடு செய்யும் பணியைச் செய்கிறது.

2) **'ஒரு மாவட்டம், ஒரு தயாரிப்பு திட்டம்' (One District, One Product)** : ஒவ்வொரு மாவட்டத்திற்குள்ளேயும் உருவாகும் பொருட்களின் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில் இத்திட்டத்தினை உத்திரப்பிரதேச அரசு கொண்டு வந்துள்ளது.

3) இந்தியக் கடற்படை ஆனது **ஐ.என்.எஸ் கரஞ்ச்** எனும் **மூன்றாவது ஸ்கார்பீன்** வகை நீர் மூழ்கிக் கப்பலை மும்பையிலுள்ள மசகான் கப்பல் கட்டுமானத் தளத்திலிருந்து நாட்டுக்கு அர்ப்பணித்து வைத்தது.

4) **ஆற்றல் 4.0 (ENERGY 4.0)** : ஏழாவது இந்திய ஆற்றல் மாநாடு (IEC) பிப்ரவரி 1, 2 ஆகிய தேதிகளில் புதுதில்லியில் நடைபெற்றது. இம்மாநாடு ஆற்றல், நிலக்கரி, புதிய & புதுப்பிக்கத்தக்க ஆற்றல், பெட்ரோலியம் & இயற்கை எரிவாயு, வெளியுறவுத்துறை போன்ற அமைச்சகங்கள் மற்றும் அணுசக்தி ஆற்றல் துறை போன்றவைகளின் கூட்டு முயற்சியால் நடைபெற்றது. இதன் **கருத்துரு : "ஆற்றல் 4.0 – 2030-ஐ நோக்கிய ஆற்றல் மாற்றம்" (Energy 4.0 - Energy Transition towards 2030)**

5) **கலா மேளா** : சர்வதேச கலா மேளா திருவிழா **முதன்முறையாக புதுதில்லியில் நடைபெற்றது**. இது 'லலித் கலா அகாடமி' மற்றும் 'இந்திரா காந்தி தேசிய கலை மையம்' ஆகியவற்றின் கூட்டு முயற்சியினால் நடத்தப் பெற்றது.

6) **கலா கோடா கலைத் திருவிழா** : பன்முகக் கலைத் திருவிழாவான இது மும்பையிலுள்ள கலா கோடாவில் நடைபெற்றது. இதன் **கருத்துரு : "நீடித்த, சுற்றுச்சூழலுக்கு உகந்ததான 'ஹாரா கோடா'"**

7) **குசும் திட்டம் (Kusum Scheme)** : **சூரிய ஒளி மின் உற்பத்தி**யை விவசாயிகள் உற்பத்தி செய்வதற்காக குசும் திட்டம் (Kisan Urja Suraksha Evam Utthaan Mahaabhiyan) மத்திய பட்ஜெட் மூலம் தொடங்கப்பட்டுள்ளது.

8) **கோபார்தன் திட்டம் (GOBAR-DHAN Scheme)** : மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட கோபார்தன் (Galvanizing Organic Bio-Agro Resource Fund Scheme) திட்டம் ஆனது கால்நடைகளின் சாணம் மற்றும் பிற திடக்கழிவுகளிலிருந்து மக்கிய உரம், **உயிரி எரிவாயு மற்றும் உயிரி-CNG** போன்றவற்றை தயாரிக்கப் பயன்படுகிறது.

9) **என்கோர் பயிற்சி** : இந்த ENCORE (Eastern Naval Command Operational Readiness) பயிற்சியானது, கடற்படையினுடையப் போரிடும் திறனின் பல்வேறு அம்சங்களைச் சோதித்துப் பார்க்க உதவுகிறது.

10) **கர்நாடக மாநிலத்துக்கான தனிக்கொடி** : கர்நாடக அரசு அமைத்த **ஒன்பது நபர்கள் அடங்கிய குழு**, அம்மாநிலத்திற்கென்ற தனிக்கொடியினை வடிவுமைத்துக் கொள்ள பரிந்துரை செய்தது. இதுவே, ஜம்மு-காஷ்மீருக்குப் பின் தனி மாநிலக் கொடியை பெறப்போகும் **இரண்டாவது மாநிலமாகும்.**

11) இரயில்வே அமைச்சகம் ஆனது **மகாராஷ்டிராவின்** மராத்வாடாவில் உள்ள லாத்தூர் மாவட்டத்தில் **புதிய இரயில் பெட்டித்தொழிற்சாலை**யை (ICF) அமைக்கவிருக்கிறது.

12) மும்பையின் சத்ரபதி சிவாஜி மகாராஜா சர்வதேச விமான நிலையம் தான் **உலகிலேயே மிகவும் சுறுசுறுப்பாக செயல்படும் ஒற்றை-ஓடுதள விமான நிலையமாகும்.** இது 24 **மணி நேரத்தில் 980 விமானங்களைக்** கையாள்கிறது.

13) **புவியமைப்பிற்கான சர்வதேச சிறப்பு விருது** : 2018-ம் ஆண்டுக்கான இவ்விருதினை **ஒடிசா மாநிலம்** பெற்றது. நிகழ் நேர அடிப்படையில் கனிம உற்பத்தி, அனுப்புகை மற்றும் சந்தை மதிப்பு போன்றவற்றை இணையத் தகவல் தொழில்நுட்ப முறையில் **(i3MS)** வெற்றிகரமாகச் செய்ததால் ஒடிசா மாநிலம் இவ்விருதினைப் பெற்றது. இவ்விருதானது **தெலுங்கானாவின் ஹைதராபாத்தில்** நடைபெற்ற புவியமைப்பிற்கான சர்வதேச மன்றக் கூடுகையின் (Geospatiation World Forum) போது வழங்கப்பட்டது.

14) **அறிவியல் மற்றும் சுற்றுச்சூழலியல் மையம்** (CSE) **உலக அளவில்** சிறந்த சூழல் கொள்கைக்கான சிந்தனைச் சாவடிகளின் தர வரிசையில் **16-வது இடத்தினையும் இந்திய அளவில் முதலிடத்தினையும்** பெற்றது.

15) **இளைஞர் திருவிழா** : **புது தில்லி**யில் உள்ள சென்ட்ரல் பூங்காவில் **ஏழாவது இளைஞர் திருவிழா** 2018 பிப்ரவரி 27 அன்று நடைபெற்றது. இதன் **கருத்துரு : “அன்பு வாழட்டும்” (Let Love Live)**

16) 15-வது வோடோஃபோன் ஒடியோன் மேடைக்கலைகளுக்கான திருவிழா **(Vodafone Odeon Theatre Festival) கொல்கத்தா**வில் நடைபெற்றது.

17) இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் **(ICMR)** மற்றும் அமெரிக்க மருந்தியல் நிறுவனமான **‘Pfizer’** ஆகியவை **புதுதில்லியில் ‘நுண்ணியிர் எதிர்ப்பு தடுப்புக்கான மையம்’ (Centre for Combat Antimicrobial Resistance)** அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

18) **ஜதன் & தர்ஷக் (Jatan & Darshak)** : அதிநவீன கணிணி மேம்பாட்டு மையம் (C-DAC) ஆனது அருங்காட்சியகப் பார்வையிடல் அனுபவத்தைத் தரும் ஜதன் (Jatan) எனும் **மென்பொருளை** உருவாக்கியுள்ளது. மேலும், மாற்றுத் திறனாளிகள் இதே அனுபவத்தைப் பெறுவதற்காக தர்ஷக் (Darshak) எனும் **அலைபேசிச் செயலி**யையும் உருவாக்கியுள்ளது.

19) **ஏகலைவா பள்ளிகள்** : 2022-ம் **ஆண்டுக்குள் பட்டியலினத்தவர்கள் மற்றும் பழங்குடியினருக்காக** நவோதயா பள்ளிகளைப் போன்றே ஏகலைவா பள்ளிகளும் தொடங்கப்பட இருக்கின்றன. இத்திட்டம் மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டதாகும்.

20) **தேசிய மூங்கில் இயக்கம் (National Bamboo Mission)** : இதன்படி, மூங்கில் உற்பத்தி மேம்பாட்டுக்காக ரூ. 1290 கோடி ஒதுக்கப்படும். **14-ம் நிதிக்குழு** நிர்ணயித்த காலத்தின் எஞ்சிய பகுதியில் (2018-19 மற்றும் 2019-20) இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

21) **கிசான் கடன் அட்டை (Kisan Credit Card)** : **மீனவர்கள், கால்நடை வளர்ப்போர் மற்றும் பால் உற்பத்தி செய்வோர்** போன்றவர்கள் **எளிமையாகக் கடன்** பெறுவதற்கு இத்திட்டம் உதவுகிறது.

22) **பிரதம அமைச்சரின் நிதிநல்கைத் திட்டம் (Prime Minister Fellowship Scheme)** : இதன் நோக்கம், திறமையுள்ள, ஆர்வமிக்க துடிப்பான **இளைஞர்களைக் கண்டறிந்து தொழில் சார்ந்த ஆராய்ச்சி**களில் அவர்களை ஊக்குவிப்பதாகும்.

23) **ஆயுஷ்மான் பாரத் திட்டம் (Ayushman Bharat Scheme)** : **தேசிய ஆரோக்கியப் பாதுகாப்புத் திட்டம்** என்று அழைக்கப்படும் இத்திட்டம் **ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஆண்டுக்கு, ரூபாய் 5 லட்சம் வரை காப்பீடு அளிக்கிறது.** உலகிலேயே மிகப்பெரிய, அரசு நிதியம் பெறும் நல்வாழ்வுத் திட்டமான இது 2018 - 19 ஆம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

24) **RISE திட்டம்** : 2018 - 19 ஆம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள 'கல்விக்கான கட்டமைப்புகளுக்கு புத்துயிர்' கொடுக்கும் திட்டம் **(Revitalizing Infrastructure and Systems in Education)** ஆனது அரசின் உயர்கல்வி நிறுவனங்களுக்கு எளிய வகை நிதியங்கள் வழங்க வழிவகை செய்கிறது.

25) **விவசாயம் 2022** : **'வேளாண் மற்றும் விவசாயிகள் நல்வாழ்வு அமைச்சகம்'** ஆனது புதுதில்லியில் உள்ள தேசிய வேளாண் அறிவியல் மையத்தில் "விவசாயம் 2022 - **விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல்"** எனும் கருத்தரங்கினை நடத்தியது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

26) 32-வது சூரஜ்குண்ட் சர்வதேச கைவினைப் பொருட்கள் மேளா ஹரியானா மாநிலத்தின் ஃபரிதாபாத்தில் நடைபெற்றது. கிர்கிஸ்தான் நாடு இந்த மேளாவை இணைந்து நடத்தியது. உத்திரப் பிரதேசத்தின் கைவினைப் பொருட்கள் இதில் மையப்படுத்தப்பட்டன.

27) **பிரதம அமைச்சர் நரேந்திர மோடி** அவர்கள் எழுதிய **"Exam Warriors"** எனும் **புத்தகம்** வெளியுறவுத் துறை அமைச்சர் திருமதி சுஷ்மா சுவராஜ் அவர்களால் புதுதில்லியில் வெளியிடப்பட்டது.

28) **SecurityCheckKiya** : **கூகுள் நிறுவனம்** ஆனது இணையப் பாதுகாப்பு மற்றும் அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த SecurityCheckKiya எனும் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.

29) **எட்டு கோடி** பயனாளர்கள் பயனுற வேண்டும் என்பதை **பிரதான் மந்திரி உஜ்ஜவாலா திட்டம் (Pradhan Mantri Ujjwala Yojana)** குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

30) ஐந்தாவது 'தெற்காசியப் பிராந்தியத்தின் பொதுக் கொள்முதலுக்கான' கருத்தரங்கு புதுதில்லியில் நடைபெற்றது, இதன் **கருத்துரு : "பொதுக் கொள்முதல் மற்றும் சேவை அளித்தல்" (Public Procurement and Service Delivery)**

31) **இரண்டாம் நிலைத் திட்டம் (Secondment Programme)** : இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் **இந்தியா-ஆஸ்திரேலியா** இடையே செய்துகொள்ளப்பட்டது. இதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அறிவித்துள்ளது.

32) **ஹம்சஃபர் அதிவிரைவு இரயில் (Humsafar Express Train)** : **மைசூரு - உதய்ப்பூர்** இடையிலான இந்த இரயிலைப் பிரதம அமைச்சர் திரு. நரேந்திர மோடி அவர்கள் மைசூரு இரயில் நிலையத்திலிருந்து தொடங்கி வைத்தார்.

33) **அக்னி-1** : உள்நாட்டுத் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட **குறைந்த தொலைவு வரம்பு கொண்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி ஏவுகணை** ஒடிசாவிலுள்ள அப்துல் கலாம் தீவில் இருந்து வெற்றிகரமாகச் சோதித்துப் பார்க்கப்பட்டது.

34) **டிஜிட்டல் குடியுரிமை மற்றும் பாதுகாப்பு (Digital Citizenship and Safety)** : **இளைய தலைமுறை**யினரிடம், இணையத்தைப் பாதுகாப்பான தளமாகக் கையாளுவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக **கூகுள் நிறுவனமும் NCERT**-ம் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளன.

35) **டைம்ஸ் (Times Higher Education – THE)** : உலகப் பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் பெங்களூருவில் உள்ள இந்திய

அறிவியல் பல்கலைக்கழகம் **(IISC) 29வது இடத்தையும்**, மும்பையிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம் **(IIT) 44வது இடத்தையும்** பெற்றுள்ளன.

36) **ரோடென்ட்ரான் பூங்கா (Rhodendron Park)** : 1.15 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இப்பூங்கா, **அருணாச்சலப் பிரதேசத்தின் தவாங் மாவட்டத்தில்** உருவாக்கப்படுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது.

37) பிரதம அமைச்சர் நரேந்திர மோடி அவர்கள் **"புது இந்தியாவுக்கான ஓட்டம்" (Run for New India)** எனும் கருத்துரு கொண்ட மாரத்தான் பந்தயத்தை குஜராத்தின் சூரத் நகரில் தொடங்கி வைத்தார்.

38) **88வது மஹாமஸ்தபிஷேகா** : இது **கர்நாடகாவின் ஹாசன் மாவட்டத்திலுள்ள சரவணபெலகோலா**வில் 12 **வருடங்களுக்கு ஒருமுறை** கொண்டாடப்படுகிறது. **குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்** அவர்கள் இவ்விழாவினை தொடங்கி வைத்து, **பாகுபலி** சிலையினைத் திறந்து வைத்தார். இவ்விழா ஆனது **கோமதீஸ்வரருக்காகக்** கொண்டாடப்படுகின்றது.

39) 2018 **தேசிய வாழைப்பழத் திருவிழா (National Banana Festival)** : **கேரளாவின் திருவனந்தபுரத்திலுள்ள** கலியூரில் நடைபெற்றது. 2017-ல் இவ்விழா மதுரையில் நடைபெற்றது.

40) **ஜனத்ரியா (Janadriyah)** : சவுதி அரேபியாவின் தேசிய பாரம்பரிய விழா ரியாத்தில் உள்ள ஜனத்ரியா கிராமத்தில், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் **சுஷ்மா சுவராஜ்** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இதில் **இந்தியா முதன்மை** விருந்தினராகக் கலந்து கொண்டது.

41) நகர்ப்புற ஏழைகள் அனைவருக்கும் 2022-க்குள் வீடுகள் வழங்க **'பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா' (Pradhan Mantri Awas Yojana)** திட்டம் வழிவகை செய்கிறது. நாடு முழுவதும் இரண்டு கோடி வீடுகள் கட்டித்தருவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

42) 2018 **மேக்னடிக் மகாராஷ்டிரா (Magnetic Maharashtra)** : இது மகாராஷ்டிராவின் **முதலாவது உலக முதலீட்டாளர்கள்** மாநாடு ஆகும். இதனை பிரதம அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

43) **கோவா மாநிலத்தின்** கடலோரப் பகுதிகளில் விரைவான மருத்துவச் சேவை கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்த **'இருசக்கர வாகன மருத்துவ ஊர்திச் சேவை' (Motor Cycle Ambulance Service)** தொடங்கப்பட்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

44) **உலர் சாம்பல் கண்காணிப்புச் செயலி (ASH TRACK APP)** : மத்திய ஆற்றல் அமைச்சகமானது "உலர் சாம்பல் கண்காணிப்பு (Ash Track)" எனப்படும் இணைய வழிக் கண்காணிப்பு அமைப்பு மற்றும் **உலர் சாம்பல் அலைபேசிச் செயலியை புதுதில்லியில்** அறிமுகப்படுத்தியது.

45) **ஹுனார் ஹாத் (Hunaar Haat)** : சிறுபான்மையினர் பிரிவைச் சேர்ந்த கைவினைக் கலைஞர்கள் தங்கள் பொருட்களைக் காட்சிப்படுத்தவும் விற்பனை செய்யவும் உதவும் வகையில் ஹுனார் ஹாத் (Hunaar Haat) ஆனது புதுதில்லியில் தொடங்கப்பட்டுள்ளது. இதன் **கருத்துரு : "கண்ணியத்துடன் கூடிய முன்னேற்றம்" (Development with Dignity)**

46) இந்தியக் கடற்படை ஆனது **'ஒருங்கிணைந்த தானியங்கி வான்பயண வளிமண்டலவியல் அமைப்பினை' (IAAMS)** கொச்சியிலுள்ள கடற்படை விமானதளமான **ஐ.என்.எஸ் கருடா**வில் அமைத்துள்ளது. இச்சிறப்பைப் பெறும் நான்காவது விமான தளம் இதுவாகும்.

47) **பீகார்** அரசானது **சில்லறையாக சிகரெட்** விற்பனை செய்வதனைத் தடை செய்துள்ளது.

48) **தஸ்தக் பிரச்சாரம் (Dastak Campaign)** : இந்தப் பிரச்சாரம் ஆனது **ஜப்பானிய மூளைக்காய்ச்சலை** முற்றிலும் ஒழிப்பதற்காக **உத்திரப்பிரதேசம்** அரசால் தொடங்கப்பட்டுள்ளது.

49) 2018 பிப்ரவரி 11 **(தேசிய யுனானி தினம்)** அன்று யுனானி மருத்துவம் பற்றிய **சர்வதேச கருத்தரங்கு** புதுதில்லியில் நடைபெற்றது.

50) மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகம் முதன்முறையாக நெடுஞ்சாலைத்திறன் கையேட்டினை வெளியிட்டுள்ளது. **Indo-HCM** என்றழைக்கப்படும் இது சாலை விரிவாக்கப் பணியில் ஈடுபடும் பொறியாளர்களுக்கான வழிமுறைகளை விளக்குகிறது.

51) **துபாயில் நடைபெற்ற ஆறாவது உலக அரசாங்க மாநாடு (6th World Government Summit)** - 2018ல் இந்தியாவின் **'ஆதார்' (Aadhar)** மற்றும் **'உமாங்க்' (Umang App)** அலைபேசிச் செயலிகள் விருதுகளை வென்றுள்ளன. 'உமாங்க்' செயலி சிறந்த அலைபேசி அரசுச் சேவைக்கான விருதினையும் **(Best m-Government Service Award)** 'ஆதார்' செயலி வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் அரசுக்கான விருதினையும் **(Best Government Emerging Technologies Award)** பெற்றுள்ளது.

52) **சிறந்த வைக்கோல் மேலாண்மை (Super Straw Management)** : நெல் அறுவடையின்போது கட்டாயமாக அறுவடை இயந்திரங்களைப் பயன்படுத்தி, எஞ்சிய

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

வைக்கோலை எரிப்பதைத் தடுத்து சிறந்த முறையில் வைக்கோலை மேலாண்மை செய்யும் திட்டத்தினை **பஞ்சாப் அரசு** செயல்படுத்தியுள்ளது.

53) **LPG பஞ்சாயத்து** : இது திரவ நிலை பெட்ரோலிய எரிவாயு **(LPG)** பயன்படுத்துபவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், கலந்துரையாடவும் ஏற்படுத்தப்பட்ட ஒரு பொதுத்தளமாகும்.

54) **தேசிய ஆரோக்கியப் பாதுகாப்புத் திட்டம் (National Health Protection Scheme)** : இத்திட்டத்திலிருந்து வெளியேறிய **முதலாவது** மாநிலம் **மேற்கு வங்கமாகும்.**

55) **போதைப் பொருட்களுக்கு எதிரான திட்டம் (Anti-Narcotics Scheme)** : மத்திய அரசானது போதைப் பொருட்களையும், மனோநிலையைப் பாதிக்கும் பொருட்களையும் சட்டவிரோதமாகக் கடத்துதலைத் தடுக்கும் இத்திட்டத்தினை **மூன்று ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.**

56) **குஜராத்திலுள்ள காந்தார் எண்ணெய் வயலில் (Gandhar Oil Field)** கரியமில வாயுவினை ($CO_2$) உட்செலுத்தும் தொழில்நுட்பத்தினைச் செயல்படுத்த ஓ.என்.ஜி.சி. (ONGC) நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இது செயல்படுத்தப்பட்டால் **ஆசியாவிலேயே மிகப்பெரிய கரியமில வாயு உட்செலுத்துத் திட்டமாக அமையும்.**

57) **பாஸ்ஷிம் லெஹார் (Paschim Lehar)** : **இந்திய இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் கடலோரக் காவல்படை** ஆகியவைகளின் கூட்டுக் கடற்பயிற்சியான இது இந்தியாவின் மேற்குக் கடற்கரையோரத்தில் நடைபெற்றது.

58) **சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டமைப்பின் (International Solar Alliance Summit)** முதல் மாநாடு 2018 மார்ச் 1 அன்று **புதுதில்லியில்** நடைபெற இருக்கிறது.

59) **'அந்த்யோதயா ஆஹார் யோஜனா' (Antyodaya Aahaar Yojana)** திட்டத்தின்கீழ் **ஹரியானா அரசு நான்கு** மானிய விலை உணவகங்களைத் தொடங்கியுள்ளது. இதன்மூலம் விளிம்பு நிலை மக்களுக்கு ஆரோக்கியமான, ஊட்டமான மற்றும் சுத்தமான உணவு அளிக்கப்படும்.

60) **பரிவர்த்தன் திட்டம் (Parivardhan Scheme)** : **ஹரியானாவில்** சுகாதாரமான, மாசற்ற சுற்றுச்சூழலை ஏற்படுத்துவதற்காக இத்திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

61) **மும்பையிலுள்ள ஜவஹர்லால் நேரு துறைமுகத்தில் நான்காவது சரக்குப் பெட்டக** முனையத்தினை பிரதமர் நரேந்திரமோடி தொடங்கி வைத்தார்.

62) **உமாங் வானொலி (Radio Umang)** : இது இந்தியாவின் **முதலாவது** ஆன்லைன் வானொலி ஆகும். உலக வானொலி தினமான 2018 பிப்ரவரி 13 அன்று இது

தொடங்கப்பட்டது. இதன் **கருத்துரு : "அமைதி, மனிதம் மற்றும் நம்பிக்கையைச் சார்ந்து" (around peace, humanity and hope)**

63) **ரிச்சர்ட் பிரான்சன்** தலைமையிலான **விர்ஜின் குழுமம் மும்பை மற்றும் புனே** இடையிலான **ஹைப்பர்லூப் (Hyper Loop)** போக்குவரத்து அமைப்பினை உருவாக்கிட மகாராஷ்டிரா அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

64) **அடல் பூஜல் யோஜனா (Atal Bhujal Yojana)** : நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கான இத்திட்டமானது மத்திய அரசால் 2018 பிப்ரவரி 18 அன்று கொண்டு வரப்பட்டது.

65) **மேடைக் கலைகளுக்கான ஒலிம்பிக்ஸ் (Theatre Olympics)** : துணைக் குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடு அவர்கள் 8-**வது மேடைக் கலைகளுக்கான ஒலிம்பிக்ஸ்** நிகழ்ச்சியினை புது தில்லியில் தொடங்கி வைத்தார். இதன் **கருத்துரு : "Flag of Friendship"**

66) **வடான் கோ ஜனோ திட்டம் (Watan Ko Jano Programme)** : இளைஞர் பரிமாற்றுத் திட்டமான இதன் கீழ் **ஜம்மு காஷ்மீரின் 200 இளைஞர்கள்** பிரதமர் நரேந்திர மோடி அவர்களையும் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களையும் புது தில்லியில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

67) **தடுப்பூசி அட்டை (Vaccination Card)** : **கேரள அரசின்** புதிய ஆரோக்கியக் கொள்கையின்படி, பள்ளியில் குழந்தைகளைச் சேர்ப்பதற்கு தடுப்பூசி அட்டை கட்டாயமாகிறது.

68) பிரதம அமைச்சர் நரேந்திர மோடி அவர்கள் **'உலகத் தகவல் தொழில்நுட்ப மாநாட்டினை' (World Information Technology Congress)** தெலுங்கானாவின் ஐதராபாத்தில் தொடங்கி வைத்தார். இதன் **கருத்துரு "எதிர்கால நிறுவனங்கள்" (Future Enterprises)**

69) **பழங்குடியினர் துணைத் திட்டம் (Tribal Sub-Plan)**: பொதுக் கணக்குக் குழுவினால் அளிக்கப்படும் கொள்கை ரீதியிலான பயன்களை உறுதி செய்ய இத்திட்டம் பயன்படுகிறது.

70) சில ஆயிரம் மக்களால் மட்டுமே பேசப்பட்டு வரும் **42 இந்திய மொழிகள்** அழிவின் விளிம்பில் இருப்பதாக **யுனெஸ்கோவின் அறிக்கை** தெரிவிக்கிறது.

71) **அஸ்மிதா யோஜனா (Asmita Yojana)** : இத்திட்டத்தின் கீழ் பள்ளி செல்லும் பெண்களுக்கான அணையாடை **(சானிட்டரி நாப்கின்)** ஐந்து ரூபாய்க்கும் கிராமப்புற பெண்களுக்கான அணையாடை 24 மற்றும் 29 ரூபாய்க்கும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினை **மகாராஷ்டிரா அரசு** உலக மகளிர் தினத்தன்று (மார்ச் 8, 2018) செயல்படுத்த இருக்கிறது.

72) **மேற்கு வங்க அரசு ஊராட்சிப் பகுதிகளில்** குப்பைகளை அகற்றும் பணிக்கு **100 நாள் வேலைத் திட்டத்தினை** பயன்படுத்தி உள்ளது.

73) **சில்க்யாரா வளைவு – பர்கோட் சுரங்கப்பாதை (Silkyara Bend-Barkot Tunnel)** : **4.531 கி.மீ** நீளம் கொண்ட இரு வழி - இரு திசைச் சாலையான இது தேசிய **நெடுஞ்சாலை – 134ல்** அமைக்கப்பட உள்ளது. **சார்தாம் மஹாமார்க் பரியோஜனா திட்டத்தின் (Chardham Mahamarg Pari Yojana)** கீழ் **உத்தரகான்ட்** மாநிலத்தில் இது அமைக்கப்பட இருக்கின்றது.

74) **அக்னி – II** : தரை விட்டு தரை பாயும் அக்னி – II ஏவுகணை **கண்டம் விட்டு கண்டம் செல்லும்** திறன் கொண்டது. இது 2018 பிப்ரவரி 22 அன்று ஒடிசாவின் அப்துல் கலாம் தீவில் வெற்றிகரமாகச் சோதனை செய்து பார்க்கப்பட்டது.

75) **பிரித்வி – II : தரை விட்டு தரை செல்லும்** குறைந்த தொலைவு வரம்பு கொண்ட கண்டம் விட்டு கண்டம் செல்லும் இந்த ஏவுகணை 2018 பிப்ரவரி 22 அன்று அப்துல் கலாம் தீவிலிருந்து வெற்றிகரமாக பரிசோதித்துப் பார்க்கப்பட்டது.

76) **தனுஷ்** : குறைந்த தொலைவு வரம்பினைக் கொண்ட தனுஷ் ஏவுகணை கண்டம் விட்டு கண்டம் பாய வல்லது. **பிரித்வி – III என்றும் அழைக்கப்படும்** இது, 2018 பிப்ரவரி 23 அன்று வங்கக்கடலின் ஒடிசா கடற்கரையில் வங்கக் கடலில் ஒரு கடற்படைக் கப்பலிலிருந்து வெற்றிகரமாகப் பரிசோதித்துப் பார்க்கப்பட்டது.

77) **‘கங்கோத்ரி ஸ்வச் பிரசித்தி பெற்ற இடங்களுக்கானத் திட்டம்’ (Gangotri Swachh Iconic Place Project) மற்றும் ‘ஸ்வஜல்’ (Swajal)** ஆகியவை **உத்தரகாண்டின்** உத்தரகாசி மாவட்டத்தில் முதன்முறையாகக் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. குடிநீர் வழங்கல் திட்டங்கள் ஆகும். இதனைப் பின்பற்றும் இரண்டாவது மாநிலம் இராஜஸ்தான் ஆகும்.

78) வடகிழக்கு மாநிலங்களிலேயே முதன்முறையாக மிசோரத்தில் விவசாயத்திற்கான இந்தியாவின் முதலாவது பிராந்திய மையம் **(India’s First Regional Centre for Agriculture)** மார்ச் 2018-ல் தொடங்கப்பட உள்ளது. இது இஸ்ரேலுடனான கூட்டு முயற்சியில் இணைந்து உருவாக்கப்பட உள்ளது.

79) **ஒடிசா மற்றும் சட்டிஸ்கர்** மாநிலங்களுக்கிடையே **மகாநதி நதிநீர் விவகாரத் தீர்ப்பாய**த்தினை உருவாக்குவதற்கு மத்திய அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

80) **YH மாலேகம் குழு (YH Malegam Committee)** : வாராக் கடன்கள், அதிகமாகும் வங்கி முறைகேடுகள் மற்றும் தணிக்கை தொடர்பான செயல்களைக் கண்காணிக்க ரிசர்வ் வங்கி இக்குழுவினை அமைத்துள்ளது.

81) மூலதனத் திட்டங்களுக்காக **வினய் ஷீல் ஒபராய் (Vinay Sheel Oberoi)** குழுவினை பாதுகாப்பு அமைச்சகம் அமைத்துள்ளது.

82) **இராஜஸ்தான் மாநிலத்தின் ஜெய்ப்பூரில்** உள்ள காந்திநகர் **இரயில் நிலையம்** ஆனது **முழுவதும் பெண்களாலேயே நிர்வகிக்கப்படும் புறநகர் அல்லாத இரயில் நிலையம் ஆகும்.** இச்சிறப்பினைப் பெற்ற முதல் புறநகர் இரயில் நிலையம் ஆனது மும்பையின் மாதுங்கா (Matunga) ஆகும்.

83) **சரஸ் PT1N (SARAS PTIN)** : இது முதன்முறையாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட **இலகுரக போக்குவரத்து விமானம்** ஆகும். இது வெற்றிகரமாக இரண்டாவது முறையாக பரிசோதனை செய்து பார்க்கப்பட்டுள்ளது.

84) **BMP - 2** : இந்திய **இராணுவத்தின் காலாட்படைப் பிரிவுக்கு BMP - 2** வாகனங்களை வாங்கவும், இந்தியக் கடற்படைக்கு கண்காணிப்புப் பயிற்சிக்கான வாகனங்கள் வாங்கவும் 1850 கோடி ரூபாய்க்கான ஒப்புதலை பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் வழங்கியுள்ளார்.

85) **44வது கஜூராஹோ நடனத் திருவிழா**, யுனெஸ்கோ உலகப் புராதான இடமான 'கஜூராஹோ கோவில்' வளாகத்தில் நடைபெற்றது. இக்கோவில் மத்தியப் பிரதேசத்தின் சத்தார்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

86) **பால ஆதார் (Bal Aadhaar)** : **நீல நிறம்** கொண்ட குழந்தைகளுக்கான ஆதார் அட்டையானது **ஐந்து வயதுக்கு** உட்பட்டவர்களுக்கு வழங்கப்படுகிறது. இது 2018 பிப்ரவரி 26 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

87) **100% LED** : அனைத்து இரயில் நிலையங்கள் முழுவதும் LED விளக்குகளால் செயல்படும் **இந்தியாவின் முதலாவது இரயில் மண்டலம் தெற்கு மத்திய இரயில் மண்டலமாகும்.**

88) **மிலன் (MILAN)** : 16 நாடுகள் பங்கேற்கும் மிலன் பயிற்சி அந்தமான் - நிக்கோபார் தீவுகளில் உள்ள போர்ட் பிளேரில் (Port Blair) மார்ச் 6 முதல் 13 வரை இந்தியக் கடற்படையால் நடத்தப்பட இருக்கிறது.

89) 2018 பிப்ரவரி 27 அன்று நிலையான வளர்ச்சிக்கான **உயிர் எரிபொருளுக்கான சர்வதேசக் கருத்தரங்கு (International Conference on Sustainable Biofuels)** புதுதில்லியில் நடைபெற்றது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

90) **ஆடி மஹோத்சவம் (Aadi Mahotsava)** : இது **அஸ்ஸாம் மாநிலம் குவஹாத்தியில்** நடைபெறும் **பழங்குடி மக்களின்** திருவிழா ஆகும்.

91) 21-வது மின் ஆளுகைக்கான தேசியக் கருத்தரங்கு **(National Conference on e-governance)** 2018 பிப்ரவரி 27 அன்று **ஐதராபாத்தில்** நடைபெற்றது. **கருத்துரு : "விரைவுபடுத்தப்பட்ட வளர்ச்சிக்கான தொழில்நுட்பம்" (Technology for Accelerating Develoment)**

92) கூட்டுச் செயல்பாட்டின் மூலம் இரயில் நிலையங்களை புத்துருவாக்கம் செய்யும் திட்டம் **(SRIJAN - Station Rejuvenation through joint Action)**. இந்தியாவிலுள்ள 635 **இரயில் நிலையங்களை** மேம்படுத்த இது உதவுகிறது. இது **'MyGov'** இணையவாயிலில் 'இந்திய இரயில்வே நிலையங்கள் மேம்பாட்டுக் கழக நிறுவனத்தினால்' வெளியிடப்பட்டுள்ளது.

93) **நிவேஷ் மித்ரா (Nivesh Mitra)** : வர்த்தகம், முதலீடு போன்ற திட்டங்களை மனித இடையீடின்றி முழுவதும் டிஜிட்டல் முறையிலேயே கையாளும் முறையினை இந்தியாவிலேயே **முதன்முறையாக** உத்திரப்பிரதேசம் கொண்டு வந்துள்ளது.

94) **துறைமுகங்கள், கடற்கரைகள், நீர்வழிச் சாலைகளுக்கான தேசியத் தொழில்நுட்ப மையம் (National Technology Centre for Ports, Waterways and Coasts)** சென்னையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தில் **(IIT Chennai)** நிறுவப்பட உள்ளது. சாகர் மாலா திட்டத்தின் கீழ் இம்மையம் அமைக்கப்படுகிறது.

95) **லாமிடியே (Lamitye)** 2018 : **இந்தியா-செஷல்ஸ்** (Seychells) இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சி 2018 பிப்ரவரி 28 அன்று இந்தியப் பெருங்கடலில் நடைபெற்றது.

96) **கருட சக்தி (Garuda Shakti)** : **இந்தியா-இந்தோனேசியா** நாடுகளின் கூட்டு இராணுவப் பயிற்சியான இது இந்தோனேசியாவின் பான்டுங் (Bandung) நகரில் நடைபெற்றது. கருட சக்தி வரிசையில் இது ஆறாவது கூட்டுப் பயிற்சியாகும்.

97) **கோப்ரா கோல்டு (Cobra Gold)** பயிற்சியானது ஆசியா மற்றும் பசிபிக் கடல் பிராந்தியத்தில் உள்ள **அமெரிக்கா, தாய்லாந்து, இந்தோனேசியா, ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர், தென்கொரியா** போன்ற ஏழு நாடுகளுக்கிடையே நடைபெற்றது.

98) இந்தியாவின் முதலாவது 'பல்வகைத் திறன் கொண்ட வான்வழிப் பயணத்துக்கான மேம்பாட்டு மையம்' **(Aviation Multi Skill Development Centre) சண்டிகர் விமான நிலையத்தில்** ஆரம்பிக்கப்பட்டது.

99) மனிதர்களைக் கடத்துதல் (தடுப்பு, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு அளித்தல்) சட்ட முன் வரைவு, 2018க்கு மத்திய அமைச்சரவை தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.

100) **வஜ்ரா (Vajra)** : 1988 ஆம் ஆண்டு டிசம்பர் 22 அன்று பணியில் சேர்க்கப்பட்ட இந்தியக் கடலோரக் காவல் படைக் கப்பலான வஜ்ரா, 30 ஆண்டுகால சேவைக்குப் பின்னர் ஒடிசாவின் பாரதீப் துறைமுகத்தில் ஓய்வு பெற்றது.

101) அமராவதியில் 'அமைதியினைத் திரும்பப் பெறுதலுக்கான சர்வதேச மையத்திற்கு' **(Universal Peace Retreat Center)** ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

102) **காப் பஞ்சாயத்துகள்** : உச்ச நீதிமன்றம் 2018 பிப்ரவரி 21 அன்று வழங்கிய தீர்ப்பின்படி, **சாதி மறுப்புத் திருமணம்** செய்து கொண்ட வயதுக்கு வந்த ஆண்கள்-பெண்கள் மீது **'காப் பஞ்சாயத்துகள்' (Khap Panchayats)** தாக்குதல் நடத்துவது சட்டவிரோதமானது ஆகும்.

## சர்வதேசம்

1) **ஓமன், ஐக்கிய அரபு அமீரகம் (UAE), ஜோர்டான் மற்றும் பாலஸ்தீனம்** ஆகிய நாடுகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி பிப்ரவரி மாதம் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

2) **TAPI எரிவாயுக் குழாய் திட்டம் (TAPI Gas Pipeline Project)** : காஸ்பியன் கடலிலிருந்து **துர்க்மேனிஸ்தான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் வழியே இந்தியாவுக்கு** எரிவாயுவினைக் கொண்டு வருவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் **இரண்டாம் நிலைப்** பணிகள் ஆப்கானிஸ்தானில் தொடங்கின.

3) **பெட்ரோ மெய்நிகர் நாணயம்** : உலகிலேயே **முதன்முதலாக வெனிசுலா** தன்னுடைய புதிய மெய்நிகர் நாணயமான (Crypto Currency) **'பெட்ரோ'வினை (Petro)** அறிமுகப்படுத்தியுள்ளது.

4) **இந்தியாவும் பூடானும்** தங்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட இராஜாங்க உறவுகளின் ஐம்பதாவது ஆண்டு விழாவினை **(Golden Jubilee)** 2018-ம் ஆண்டில் கொண்டாடின.

5) **ஒரே பாலினத்தவர் திருமணம்** செய்து கொள்வதை ரத்து செய்த **உலகின் முதல் நாடாக பெர்முடா** திகழ்கின்றது.

6) **ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் (UNGA)** தங்களின் நிலுவைத் தொகையைக் கட்டாததால் வெனிசுலா மற்றும் லிபியா நாடுகளின் வாக்களிக்கும் உரிமை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

7) **இந்தியா-இங்கிலாந்து (UK)** ஆகிய நாடுகள் இணைந்து 'நீரின் தர ஆராய்ச்சி' (Water Quality Research) மற்றும் "கட்டமைக்கப்பட்ட சூழலில் ஆற்றல் தேவைக் குறைப்பு"

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

**(Energy Demand Reduction in Built Environment)** ஆகியவற்றில் ஆய்வு செய்கின்றன.

8) **இந்தியா, ஈரான்** இடையே **சாபஹார் துறைமுகம், இரட்டை வரி விதிப்பு தவிர்த்தல்** தொடர்பான ஒன்பது ஒப்பந்தங்கள் கையெழுத்திடப் பட்டுள்ளன. இவை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஈரான் அதிபர் ஹசன் ரௌஹானி ஆகியோருக்கிடையே கையெழுத்தாகியது.

9) வர்த்தக அலுவல்களை **ஆண்களின் துணையின்றி பெண்கள்** ஆரம்பித்துக் கொள்ள **சவுதி அரேபியா** அனுமதி வழங்கியுள்ளது.

10) பசுமையக வாயுக்களின் வெளியீட்டைக் குறைப்பதற்காக **சிங்கப்பூர் ஆனது 2019 முதல் கார்பன் வரி** விதிக்கத் திட்டமிட்டுள்ளது.

11) இலங்கை தனது **70-வது சுதந்திர தினத்தை** 2018 பிப்ரவரி 4 அன்று கொண்டாடியது. இதன் **கருத்துரு : "ஒரே நாடு" (One Nation)**

12) **K.P. சர்மா ஒளி** நேபாளத்தின் பிரதமராக **இரண்டாம் முறையாகப்** பொறுப்பேற்றுள்ளார். இவர் **நேபாளத்தின் 41-வது பிரதமராவார்**. நேபாள அதிபர் : பித்யா தேவி பந்தாரி

13) ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) மாநாடு சீனாவின் கிழக்கு ஷான்டாங் மாகாணத்தின் குயிங்டாவோவில் (Qingdao) 2018 ஜுன் மாதம் நடைபெற இருக்கிறது.

14) 2018 பிப்ரவரி 15 அன்று தென் ஆப்ரிக்காவின் அதிபர் பொறுப்பில் இருந்து **ஜேக்கப் ஜுமா விலகினார்**. அவர் 2009 முதல் ஒன்பது ஆண்டுகளாக தென் ஆப்ரிக்க அதிபராக இருந்த இவர், ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர் ஆவார்.

15) தென் ஆப்ரிக்காவின் **புதிய அதிபராக சிரில் ராம்ஃபோசா** பதவியேற்றுள்ளார். இவர் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் ஆவார்.

16) **MTPC நிறுவனம்** ஆனது 15 ஆண்டுகளுக்கு 300 மெகாவாட்டுகள் மின்சாரத்தினை **வங்க தேசத்துக்கு** வழங்க இருக்கிறது.

17) அனைத்துக் குடிமக்களுக்கும் **கண் சிகிச்சையை** அளிக்கும் உலகின் குறைவான வருமானம் கொண்ட முதலாவது நாடாக **ருவாண்டா** உருவாகியுள்ளது.

18) பல வருடங்களாக கடுமையான முறையில் அமலில் இருந்த கலை மற்றும் பொழுதுபோக்குக்கான விதிகளை மாற்றியமைத்து சவுதி அரேபியா தனது முதல் **'அரேபிய ஃபேஷன் வாரத்தினை'** மார்ச் மாதம் கொண்டாடவிருக்கிறது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

19) பிரதம அமைச்சர் நரேந்திரமோடி அவர்கள் ஐக்கிய அரபு அமீரகத்தின் **(UAE)** அபுதாபியில் உள்ள அல் வத்பாவில் (Al Wathba) **முதலாவது இந்து கோவிலைக்** கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்.

20) **ஆறாவது 'உலக அரசாங்க மாநாடு' (6th World Government Summit) துபாயில்** (UAE) 2018 பிப்ரவரி 11 முதல் 13 வரை நடைபெற்றது. **இந்தியா இதன் அழைப்பு விருந்தினராகக் கலந்து கொண்டது.** பிரதமர் நரேந்திர மோடி இதில் தொடக்கவுரை ஆற்றினார்.

21) **டுக்கும் துறைமுகம் (Duqm Port)** : இராணுவப் பயன்பாட்டுக்கும் பண்டகப் போக்குவரத்துக்கும் மிகவும் உதவும் வகையில் அரபிக் கடலில் உள்ள ஓமனின் டுக்கும் துறைமுகத்திற்கான நுழைவினை இந்தியா பெற்றுள்ளது.

22) **இந்தியாவும் பாலஸ்தீனமும் கல்வி மற்றும் சுகாதாரம்** ஆகிய துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன. இவை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் **பாலஸ்தீன அதிபர் முஹமது அப்பாஸ்** ஆகியோரால் ரமல்லா (Ramallah) நகரில் கையெழுத்திடப்பட்டன.

23) **இந்தியாவும் ஓமனும் பாதுகாப்பு, சுகாதாரம், சுற்றுலா** ஆகிய துறைகளின் மீதான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன. இவை பிரதமர் **நரேந்திர மோடியினுடைய ஓமனுக்கான முதலாவது பயண**த்தின்போது மேற்கொள்ளப்பட்டன.

24) **J-20** எனும் நான்காம் தலைமுறை **புலப்படாத போர்விமானத்தினை சீனா** தனது விமானப் படையில் இணைத்துள்ளது.

25) **அஷ்காபாத் ஒப்பந்தம் (Ashgabat Agreement)** : மத்திய ஆசியா மற்றும் பாரசீக வளைகுடா பகுதிகளுடன் இணைப்பை ஏற்படுத்தும் சர்வதேசப் போக்குவரத்துக்கான பாதையை இது உறுதி செய்கிறது. **சமீபத்தில் இந்தியா இந்த ஒப்பந்தத்தில் இணைந்தது.**

26) தனது நாட்டில் **15 நாட்களுக்கு** அவசர நிலைப் பிரகடனத்தை **மாலத்தீவின் அதிபர்** அறிவித்துள்ளார்.

27) "ஐக்கிய நாடுகள் சபையின் விரிவான அகதிகள் பதில் நடவடிக்கைக் கட்டமைப்பிலிருந்து" (UN Comprehensive Refugee Response Framework) **தான்சானியா வெளியேறியது.**

28) "நிதிசார் நடவடிக்கை சிறப்புப் பணிப்பிரிவினுடைய (FATF)" தீவிரவாதத்திற்கு நிதியளித்தலை கண்காணிக்கும் பட்டியல் அல்லது சாம்பல் பட்டியலில் **(Grey list) பாகிஸ்தான்** வரும் ஜூன் மாதத்திலிருந்து வைக்கப்படவிருக்கிறது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

29) அமெரிக்காவினுடைய பெடரல் ரிசர்வ் வங்கியின் **16வது தலைவராக ஜெரோம் H. பவல்** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

30) **டிரான்ஸ் பசிபிக் கூட்டமைப்பிலிருந்து (TPP - Trans Pacific Partnership) அமெரிக்கா (USA) வெளியேறியது.** இது அமெரிக்கா மற்றும் பசிபிக் பிராந்தியத்தில் உள்ள குறிப்பிட்ட 11 நாடுகளுக்கும் இடையிலான தடையில்லா வர்த்தக உடன்படிக்கையாகும் (FTA). ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியா, புரூனே, வியட்நாம், ஜப்பான், கனடா, மெக்ஸிகோ, பெரு மற்றும் சிலி போன்றவை அவற்றுள் இடம் பெற்றுள்ள நாடுகளாகும்.

31) 'ஆசிய உள்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வங்கி' (AIIB) ஆனது 1.5 பில்லியன் அமெரிக்க டாலர்களை இந்தியாவின் உள்கட்டமைப்பு தொடர்பான திட்டங்களுக்காக வழங்கியுள்ளது.

32) இராஜஸ்தானின் **பாலைவனப் பகுதிகளில் நீர்ப்பிரிப்புப் பகுதிகளை மறுசீரமைப்பதற்காக** புது வளர்ச்சி வங்கியிடமிருந்து (New Development Bank) கடன்பெறும் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

33) **அஸ்ஸாமில் பண்டகப் பூங்கா** : அஸ்ஸாமின் ஜோகிகோபாவில் (Jogighopa) ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) உதவியுடன் பன்முனைய பண்டக பூங்கா **(Multimodel Logistics Park)** அமைக்கப்பட உள்ளது.

34) **மென் ஆற்றல் மேட்ரிக்ஸ் (Soft Power Matix)** : இது வெளிநாடுகளில் இந்தியாவின் மென்மையான உறவுகளுக்கான அணுகுமுறையை வலுப்படுத்தும் ஒரு கருவியாகும்.

## பொருளாதாரம்

1) **ஆபரேஷன் பசுமை (Operation Green)** : 2018 - 19 ஆம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம் 2022க்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் குறிக்கோளுடையது. விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சரியான விலை கிடைப்பதனை இத்திட்டம் உறுதி செய்கிறது.

2) **மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)**, தொழிற்துறை உற்பத்திக் குறியீடு (IIP), நுகர்வோர் விலைக் குறியீடு (CPI) ஆகியவற்றுக்கான அடிப்படை ஆண்டினை மாற்றியமைக்க அரசு எத்தனித்துள்ளது. நாட்டில் ஏற்படும் பொருளாதார மாற்றங்களைச் சமாளிக்கும் வகையில் இதனை அரசு செய்ய உள்ளது. **தற்போதைய அடிப்படை ஆண்டாக 2011-12 உள்ளது.**

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

3) **தேசிய மகளிர் தொழில்முனைவோர் குழு (National Women Entrepreneurship Council)** : மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகமானது வர்த்தக அலுவல்களில் பெண்களின் தொழில்முனைவினை மேம்படுத்த இந்தக் கவுன்சிலை அமைக்கும் யோசனையில் உள்ளது.

4) **உலக நீடித்த வளர்ச்சிக்கான மாநாடு** 2018 **(World Sustainable Development Summit 2018)** புது தில்லியின் விஞ்ஞான் பவனில் நடைபெற்றது. இதனை TERI நிறுவனம் நடத்தியது. இதன் **கருத்துரு : "Partnerships for a Resilient Planet".**

5) **'Military Balance 2018'** அறிக்கையின்படி பாதுகாப்புப் பட்ஜெட்டில் இந்தியா ஐந்தாம் இடத்திலும் அமெரிக்கா (USA) முதல் இடத்திலும் உள்ளது.

6) **டைம்ஸ் குழுமத்தினுடைய சர்வதேச வணிக மாநாட்டின் (Global Business Summit 2018)** நான்காவது பதிப்பு புதுதில்லியில் நடைபெற்றது. இதன் **கருத்துரு : "புதிய பொருளாதாரம், புதிய விதிகள்" (New Economy, New Rules)**

7) **உள்ளடக்கிய இணையத்திற்கான குறியீடு (Inclusive Internet Index, 2018)** அறிக்கையினை முகநூல் நிறுவனம் (Facebook) மற்றும் பொருளாதார நுண்ணறிவுப் பிரிவு (Economic Intelligence Unit) ஆகியவை வெளியிட்டன. இதில் மொத்தமுள்ள 86 நாடுகளில் இந்தியா 47வது இடத்தில் உள்ளது. ஸ்வீடன் முதல் இடத்தையும் காங்கோ கடைசி இடத்தையும் பிடித்துள்ளன.

8) **சட்டத்தின் ஆட்சிக்கான குறியீடு (Rule of Law Index)** : 'உலக நீதித் திட்டம்' (World Justice Project) வெளியிட்ட இவ்வறிக்கையில் இந்தியா 62வது இடத்தைப் பிடித்துள்ளது.

9) **ஊழல் மலிவுச் சுட்டெண்** - 2017 **(Corruption Perception Index)** : சர்வதேச வெளிப்படை நிறுவனம் (Transparency International) எனும் அரசு சாரா நிறுவனத்தால் வெளியிடப்படும் இந்தப் பட்டியலில், மொத்தமுள்ள 180 நாடுகளில் இந்தியா 81-வது இடத்தில் உள்ளது. நியூசிலாந்து முதல் இடத்திலும் சோமாலியா கடைசி இடத்திலும் உள்ளன.

10) **தேர்தல் நிதிப் பத்திரங்கள் (Electoral Bonds)**: மும்பை, சென்னை, கொல்கத்தா மற்றும் புதுதில்லி ஆகிய நகரங்களில் உள்ள பாரத ஸ்டேட் வங்கிக் கிளைகள் தேர்தல் நிதிப் பத்திரங்களை வெளியிட உள்ளன. மார்ச் 1-ம் தேதியிலிருந்து 10 நாட்களுக்கு இவை விற்பனை செய்யப்படும்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

11) **பச்சிளங்குழந்தைகள் இறப்பு விகிதம் (Neonatal Mortality Rate)** : யுனிசெஃப்பின் (UNICEF) அறிக்கையின்படி இவ்விகிதமானது 1000 **பிறப்புகளுக்கு 25.4 இறப்புகள்** என்ற விகிதத்தில் உள்ளது.

12) **New World Health** எனும் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையின்படி, வளமான நாடுகளின் பட்டியலில் இந்தியா ஆறாவது இடத்தில் உள்ளது. அமெரிக்கா (USA) முதல் இடத்தில் உள்ளது.

13) **மத்திய பட்ஜெட்** 2018 : சரக்கு மற்றும் சேவை வரி (GST) அமலுக்கு வந்த பிறகு வெளிவரும் முதல் பட்ஜெட் இதுவேயாகும்.

14) டாடா அறக்கட்டளையின் "இந்திய நல்வாழ்வு நிதியம்" (India Health Fund) ஆனது உலகளாவிய நிதியத்துடன் இணைந்து எலும்புருக்கி நோய் (Tuberclosis) மற்றும் மலேரியாவை முற்றிலும் அழிக்கக்கூடிய புத்தாக்கங்கள் மற்றும் தொழில்நுட்பங்களுக்கு நிதியுதவி செய்து வருகிறது.

15) **இந்தியப் போட்டி ஒழுங்குமுறை ஆணையம் (Competition Commission of India - CCI)** : கூகுள் நிறுவனத்தின் மீது இந்தியச் சந்தைக்கான இணையத் தேடலில் நியாயமற்ற வணிக நடைமுறைகளைப் பின்பற்றியதற்காக 136 கோடி ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

16) **சர்வதேச அறிவுசார் சொத்துரிமைக் குறியீடு** - 2018 **(Intellectual Property Index 2018)** : அமெரிக்க வர்த்தக சபையினால் (US Chamber of Commerce) வெளியிடப்படும் இக்குறியீட்டில் மொத்தமுள்ள 50 நாடுகளில் **இந்தியா 44வது இடத்தில் உள்ளது**. அமெரிக்கா (USA) முதல் இடத்தில் உள்ளது.

17) **வளர்ச்சித் தாக்கப் பத்திரங்கள் (Develoment Impact Bond)** என்பவை இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் அவர்களால் வெளியிடப்பட்ட 10 மில்லியன் டாலர் மதிப்புள்ள பத்திரங்களாகும், இவை இந்தியாவில் உள்ள இரண்டு லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக செலவிடப்பட உள்ளன.

18) **CrisidEx** : இது எட்டு அளவுருக்களுடன் கூடிய கூட்டுக் குறியீடு ஆகும். இது சிறுகுறு நிறுவனங்களின் வணிக உணர்வுகளை (MSE Business Sentiment) 0-200 எனும் மதிப்பீட்டளவில் அளவிடுகிறது. மேலும் இது CRISIL (Credit Rating Information Services of India Limited) மற்றும் இந்திய சிறுதொழில் மேம்பாட்டு வங்கி (SIDBI) என்ற இரண்டு நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் வெளியிடப்படுகின்றது.

19) **NITI மன்றம் (NITI Forum)** : வடகிழக்கு இந்தியாவுக்கான NITI மன்றம் வேகமான, நீடித்த வளர்ச்சியினை ஊக்குவிக்கவும், அதில் ஏற்படும் தடைகளைக் கண்டறிந்து உரிய இடையீடுகளுக்கு எதிர்வினையாற்றவும் உதவுகிறது.

20) **பொருளாதார நுண்ணறிவுப் பிரிவினால் (Economic Intelligence Unit)** வெளியிடப்படும் **'உலக மக்களாட்சிக்கான குறியீடு - 2017'** (Global Democracy Index 2017)-ல் மொத்தமுள்ள 165 நாடுகளில் **இந்தியா 42-வது இடத்தில் உள்ளது.** நார்வே முதல் இடத்திலும், வடகொரியா கடைசி இடத்திலும் உள்ளன. 2016 ஆம் ஆண்டில் இந்தியா 32-வது இடத்தில் இருந்தது.

21) **New World Wealth** எனும் நிறுவனம் வெளியிட்டுள்ள 15 பணக்கார நகரங்களின் பட்டியலில், இந்தியாவின் வணிகத் தலைநகரமான **மும்பை 950 பில்லியன் அமெரிக்க டாலர்களுடன் 12-வது இடத்தில் உள்ளது.** இப்பட்டியலில் நியூயார்க் (New York) நகரம் முதல் இடத்தில் உள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

1) 2018 ஆம் ஆண்டு **உலகச் சுற்றுச்சூழல் தினத்தினை** (World Environment Day) இந்தியா நடத்த இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜுன் மாதம் ஐந்தாம் நாள் இந்த தினம் கடைபிடிக்கப்படுகின்றது. இதன் **கருத்துரு : "பிளாஸ்டிக் மாசுபாடுகளை வெல்லுதல்" (Beat Plastic Pollution)**

2) **நோரோவைரஸ் (Noro virus)** : தென்கொரியாவின் பியாங்சாங் நகரில் நடைபெற்ற 23-வது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின் போது, நோரோவைரஸ் எனும் கிருமியினால் மிகப்பெரிய அளவில் நோய்த்தொற்று பரவியது.

3) **உலகின் மிகவும் சக்தி வாய்ந்த ராக்கெட்** : நாசாவின் சனி - V (Saturn V) ராக்கெட்டுக்குப்பின் உலகின் மிகவும் சக்தி வாய்ந்த ராக்கெட்டாக **ஃபால்கன் ஹெவி (Falcon Heavy)** ராக்கெட் உள்ளது. இது கேப் கனாவரால் இருந்து விண்ணில் செலுத்தப்பட்டது.

4) **இணைய வழித் தாக்குதல்கள் (Web Application Attack)** : 'இணையப் பாதுகாப்புக்கான **அக்கமை (Akamai)**' அறிக்கையின்படி இணைய வழித் தாக்குதலுக்கு உள்ளாகும் நாடுகளில் இந்தியா ஏழாவது இடத்தில் உள்ளது.

5) **அறிவியல் தொழில்நுட்ப ஆஸ்கர் (Sci-Tech-Oscar - 2018)** விருதினை இந்தியப் பொறியாளர் **விகாஸ் சதயே** (Vikas Sathaye) பெறுகிறார்.

6) **மைட்டோகாண்ட்ரிய கொடை சிகிச்சை (Mitochondrial Donation Therapy)** : **பிரிட்டன்** மருத்துவர்கள் நாட்டின் முதல் 'மூன்று - பெற்றோர் குழந்தைகளை' **(3 Parent babies)** பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கியிருக்கின்றனர். **மெக்சிகோ** நாட்டில் தான் முதன்முறையாக இச்சிகிச்சை முறை பின்பற்றப்பட்டது.

7) மனிதக் கருமுட்டைகளின் ஓவரியத் திசு நிலையிலிருந்து அவை முதிர்ச்சி அடையும் நிலை வரையில் ஆய்வகத்திலேயே வெற்றிகரமாக செய்து முடித்துள்ள முதல் நிகழ்வு பிரிட்டன் மற்றும் அமெரிக்க அறிவியலாளர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளது.

8) **இந்திய விலங்கியல் நிறுவனம் (Zoological Survey of India)** ஆனது வங்கக் கடல் பகுதியில் ஜிம்னோதொராக்ஸ் சூடோடைல், ஜிம்னோதொராக்ஸ் விசாகேன்சிஸ், என்செலிக்கோர் புரோபின்குவா எனும் மூன்று **புதிய வகை விலாங்கு இனங்களைக் கண்டறிந்துள்ளது.**

9) **கிதா சூறாவளி (Cyclone Gita)** : தெற்கு பசிபிக் நாடான **டோங்காவானது** சமீபத்தில் கிதா சூறாவளியால் தீவிரமாக பாதிக்கப்பட்டது. இந்நாட்டிற்கு 1 மில்லியன் டாலர் உதவியினை இந்தியா வழங்கியுள்ளது.

10) **நாசாவின் $K_2$ திட்டம் (NASA's $K_2$ Mission)** : இத்திட்டத்தின் மூலம் நாசா விஞ்ஞானிகள் சூரியக் குடும்பத்துக்கு வெளிப்புறம் அமைந்துள்ள 100 வெளிக்கோள்களை (Exoplanets) கண்டறிந்துள்ளனர்.

11) அண்மையில் மெக்சிகோவின் **யுகாடான் தீபகற்பத்தில் (Yucatan Peninsula) உலகின் மிகப்பெரிய வெள்ள மூழ்கு குகை (flooded cave)** ஆழ்கடல் நீர்மூழ்கு வீரர்களால் (Scuba divers) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

12) நார்வேயில் உள்ள "ஸ்வால் பார்ட் உலக விதைகள் சேகரிப்பு நிலையம்" **(Svalbard Global Seed Vault)** அண்மையில் 10 ஆண்டுகளை நிறைவு செய்தது.

13) **தென் ஆப்பிரிக்கா** அரசானது அண்மையில் ஏற்பட்ட வறட்சியினை **தேசியப் பேரிடராக** அறிவித்துள்ளது.

14) ஸ்பெயினின் பார்சிலோனாவில் நடைபெற்ற **'உலக அலைபேசி மாநாடு 2018' (World Mobile Congress)**-ல் **பாலோங் 5G01 (Balong 5G01)** எனும் உலகின் முதல் ஐந்தாம் தலைமுறை 5G சில்லுத்தொகுதியினை (Chipset) ஹூவாய் (Huawei) நிறுவனம் வெளியிட்டது.

15) **ரஸ்டம் - 2 (Rustom-2)** : ஆளில்லா விமானமான ரஸ்டம் - 2 **பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தால் (DRDO)** முதன்முறையாக வெற்றிகரமாக சோதித்துப்

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

பார்க்கப்பட்டது. இச்சோதனை **கர்நாடகாவின் சித்ரதுர்காவில்** உள்ள வானூர்தி சோதனை வரம்பு மையத்தில் நடைபெற்றது.

16) மேற்கு வங்கத்தின் **பக்சா மற்றும் ஜல்தாபாரா தேசியப் பூங்காக்களில்** கண்டறியப்பட்ட புதிய தாவர இனத்துக்கு முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. APJ. அப்துல் கலாம் அவர்களின் நினைவாக **'டிரிபிடஸ் கலாமி' (Drypetes Kalamii)** என்று பெயரிடப்பட்டுள்ளது.

17) **உலக காண்டாமிருகங்கள் தினமான (World Rhino Day)** செப்டம்பர் 22-ம் நாளை **அசாம் மாநில அரசு**, பொதுமக்களிடம் காண்டாமிருகங்களின் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 'காண்டாமிருகங்கள் நாளாக' (Rhino Day) கொண்டாட இருக்கிறது.

18) **5G நெட்வொர்க் : ஏர்டெல் மற்றும் ஹூவாய்** நிறுவனங்கள் இணைந்து இந்தியாவின் **முதலாவது ஐந்தாம் தலைமுறை** தகவல் வலைப்பின்னலுக்கான சோதனையை வெற்றிகரமாக நிகழ்த்தியுள்ளன.

19) **உய்ய மிகைநிலை $CO_2$ – பிரேடான் சுழற்சி வசதி** : பெங்களூருவில் உள்ள இந்திய தேசிய அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தால் (IISC) இந்தியாவின் முதலாவது 'உய்ய மிகைநிலை $CO_2$ பிரேடன் சோதனை வளை தடப்பாதை' **(Super Critical Carbon dioxide (S-$CO_2$) Brayton Test Loop Facility)** அமைக்கப்பட்டுள்ளது.

20) இந்தியாவின் முதலாவது செயற்கை நுண்ணறிவு மையம் **(First Artificial Intelligence Centre) மும்பையில்** அமைக்கப்பட உள்ளது.

21) **மாலாசிடின்கள் (Malacidins)** : நியூயார்க்கின் ராக்ஃபெல்லர் பல்கலைக்கழகத்தின் அறிவியலாளர்கள் மண்ணில் காணப்படும் புதிய வகை நோய் நுண்ணுயிர்க் கொல்லிகளான (antibiotics) மாலாசிடின்களைக் கண்டறிந்துள்ளனர்.

22) ஒடிசாவில் உள்ள சிலிகா ஏரி ஆனது ஐராவதி டால்பின்களின் மிகப்பெரிய வாழிடமாகத் திகழ்கிறது.

23) **புதிய அறிவியல் நகரம் (New Science City)** : பஞ்சாபில் உள்ள கபுர்தலாவில் அறிவியல் நகரத்தினை உருவாக்கியதில் முக்கியப் பங்கு வகுத்த ரக்பிர் சிங் கந்த்புர் அவர்களுக்கு சிறப்பு விருது வழங்கப்பட்டது.

24) **ரஷ்ய விண்வெளி முகமையான ராஸ்காஸ்மோஸ் (Raskosmos MS-08)** எனும் ஆளில்லா சரக்கு விண்கலத்தை சர்வதேச விண்வெளி மையத்துக்கு (ISS) அனுப்பியுள்ளது. இதனை **சோயுஸ்** – 2 **(Soyuz - 2)** ராக்கெட் எடுத்துச் சென்றது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

25) ஆந்திராவின் **கொல்லேறு** ஏரியில் அமைந்துள்ள **அடபாகா பறவைகள் சரணாலயத்தில் (Atapaka Bird Sanctuary)** கூழைக்கடா பறவைகள் திருவிழா - 2018 **(Pelican Bird Festival)** நடைபெற்றது.

26) உத்திரப் பிரதேச மாநிலத்தின் **முதலாவது வண்ணத்துப்பூச்சிப் பூங்கா** கான்பூரில் தொடங்கப்பட்டது.

27) மகாராஷ்டிராவின் சந்திரபூர் மாவட்டத்தில் உள்ள கோடாசாரியில் (Ghodazari) **புதிய வனவிலங்குகள் சரணாலயம்** அமைக்கப்பட உள்ளது. இது **தடோபா அந்தேரி புலிகள் காப்பகத்துக்கு (Tadoba-Andhari Tiger Reserve)** வடகிழக்கில் அமைந்துள்ளது.

**28)** இந்தியாவின் சந்திரயான் - 1 மற்றும் நாசாவின் 'சந்திர ஆய்வுப்பணி சுற்றுச் செயற்கைக்கோள்' (Lunal Reconnaissance Orbiter) ஆகியவற்றிலிருந்து திரட்டப்பட்ட தகவல்களின்படி, **நிலவில் தண்ணீர் பறந்துபட்ட அளவில் பரவியிருக்கின்றது.**

## நியமனங்கள், ஆளுமைகள் மற்றும் விருதுகள்

1) **மாகாஹி (Magahi) மொழி எழுத்தாளரான ஷேஷ் ஆனந்த் மதுகருக்கு (Shesh Anand Madhukar)** சாகித்திய அகாடமியின் **பாஷா சம்மன் விருது** (Sahitya Akademi Bhasha Samman Award) வழங்கப்பட்டுள்ளது. மாகாஹி அல்லது மகதி மொழியானது பீகார் - ஜார்க்கண்ட் பகுதிகளில் பேசப்பட்டு வரும் ஒரு மொழியாகும்.

2) மூத்த நடிகையான ஸ்ரீ தேவி துபாயில் இயற்கை எய்தினார். இவர் 1969-ல் வெளியான 'துணைவன்' எனும் தமிழ்ப் படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானார்.

3) **தேசிய பாதுகாப்புப் படையின் (National Security Guard)** புதிய இயக்குநர் ஜெனரலாக **சுதீப் லக்தாகியா (Sudee Lakhtakia)** பொறுப்பேற்றுள்ளார். இவருக்கு முன் S.P. சிங் இப்பதவியில் இருந்தார்.

4) ஆப்பிரிக்க தலைமைத்துவத்துக்காக வழங்கப்படும் இப்ராஹிம் விருதினை லை பீரியாவின் முன்னாள் அதிபர் **எல்லென் ஜான்சன் சர்லீஃபுக்கு** வழங்கப்படுகிறது.

5) உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதியான நாராயண் சுக்லாவை பதவி நீக்கம் **(Impeachment of Allahabad HC Judge)** செய்யப் பரிந்துரை செய்துள்ளார்.

6) **தூய்மை இந்தியா திட்டத்தின் நல்லெண்ணத் தூதுவரான குன்வர் பாய்** தனது 106-வது வயதில் சத்தீஸ்கரில் மரணமடைந்தார்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

7) **முதல் பெண் போர் விமானி (First Woman Fighter Pilot)** : 24 வயதே நிரம்பிய **அவானி சதுர்வேதி** எனும் பெண்மணி இந்திய வான் படையின் மிக்-21 ரக பைசன் போர் விமானத்தை 2018 பிப்ரவரி 22 அன்று தனியாளாக ஓட்டி சாதனை படைத்தார்.

8) 71-வது பிரிட்டிஷ் அகாடமி திரைப்பட விருதுகளில் சிறந்த திரைப்படத்துக்கான விருதை **"Three Billboards Outside Ebbing, Missouri"** எனும் திரைப்படம் பெற்றது.

9) கன்னட எழுத்தாளர் **சந்திரசேகர கம்பர்** சாகித்திய அகாடமியின் தலைவராகவும் இந்தி மொழிக் கவிஞரான மாதவ் கவுசிக் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

10) 2018 பிப்ரவரி 28 அன்று காஞ்சி காமகோடி பீடத்தின் 70-வது சங்கராச்சாரியாராக விஜயேந்திர சரஸ்வதி நியமிக்கப்பட்டார்.

11) பாலஸ்தீனத்தின் **"Grand Collar of the State"** விருது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டது.

12) உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) 'இஷான் டோக்ராம்சி குடும்ப நல விருது' **(Ihsan Dogramaci Family Health Foundation Prize)** முதன்முறையாக **வினோத்பால்** எனும் இந்தியருக்கு வழங்கப்படுகிறது.

## விளையாட்டு

1) ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் நடைபெற்ற **ஜிம்னாஸ்டிக்ஸ் உலகக் கோப்பைப்** போட்டியில் (2018) வெண்கலப் பதக்கம் வென்ற முதல் இந்திய வீரர் என்ற பெருமையை **அருணா ரெட்டி** பெறுகிறார்.

2) **தேசிய மகளிருக்கான சீனியர் கால்பந்துப் போட்டியின்** இறுதி ஆட்டத்தில் மணிப்பூரை வீழ்த்தி முதன்முறையாக **தமிழ்நாடு சாம்பியன் பட்டம்** வென்றது.

3) தேசிய அளவிலான 2018 ஆம் ஆண்டின், 'A' பிரிவு பார்வையற்றோருக்கான சதுரங்க ஆட்டத்தில் கர்நாடகாவின் **கிஷன் கங்கோலி** சாம்பியன் பட்டம் வென்றார்.

4) **முதலாவது கேலோ இந்தியா பள்ளிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள்** (First Khelo India School Games) புது தில்லியில் நடைபெற்றன. இதில் **ஹரியானா 108 பதக்கங்களுடன் முதல் இடத்தையும் தமிழ்நாடு 28 பதக்கங்களுடன் 9-வது இடத்தையும்** பிடித்துள்ளன.

5) **பருபல்லி காஷ்யப் ஆஸ்திரேலிய ஓபன் பேட்மின்டன் போட்டியில்** சாம்பியன் பட்டம் வென்றார்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

**6)** நியூசிலாந்தில் நடைபெற்ற நான்காவது 19 **வயதுக்குட்பட்டவர்களுக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் (2018)** இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது. இந்த உலக கோப்பையினை **இந்தியா நான்காவது முறையாக வென்றுள்ளது.**

7) இந்தியாவின் **ஜுலான் கோஸ்வாமி சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் 200 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய முதல் இந்தியப் பெண்மணி** என்ற பெருமையைப் பெறுகிறார்.

8) உலக கோல்ஃப் தரவரிசை : 21 வயதே நிரம்பிய இந்தியாவின் **சுபாங்கர் சர்மா** உலக கோல்ஃப் தரவரிசையில் 72-வது இடத்தில் உள்ளார்.

9) சீன மகளிர் PGA சுற்றுப்பயணத்துக்குத் முதலாவது இந்திய கோல்ஃப் விளையாட்டு வீரராக சர்மிளா நிகோலட் (Sharmila Nicollet) தகுதி பெற்றுள்ளார்.

10) **லாரஸ் உலக விளையாட்டு விருதுகள்** (Laureus World Sports Awards) : டென்னிஸ்

- ஆண்டின் சிறந்த வீரர் : **ரோஜர் பெடரர்**
- ஆண்டின் சிறந்த வீராங்கனை : **செரீனா வில்லியம்ஸ்**
- ஆண்டின் சிறந்த மீண்டு வந்த வீரருக்கான (Comeback) விருது : **ரோஜர் பெடரர்**

11) 2018-ம் ஆண்டு **விஜய் ஹசாரே கோப்பையின் (கிரிக்கெட்)** இறுதி ஆட்டத்தில் சவுராஷ்டிராவுக்கு எதிரான ஆட்டத்தில் **கர்நாடக அணி** வெற்றி வெற்றது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## முக்கிய தினங்கள்

| தினம் | நிகழ்வுகள் | கருத்துரு/முக்கியத்துவம் |
|---|---|---|
| பிப்ரவரி 1 | கடலோரக் காவல்படை தினம் | "வயம் ராக்ஷாமா" (நாம் பாதுகாப்போம்) |
| பிப்ரவரி 2 | உலக ஈரநிலங்கள் தினம் | "நீடித்த எதிர்கால நகர்ப்புற வளர்ச்சிக்கான சதுப்பு நிலங்கள்" |
| பிப்ரவரி 4 | உலகப் புற்றுநோய் தினம் | "நம்மால் முடியும், என்னால் முடியும்" |
| பிப்ரவரி 6 | பெண்களின் இனப்பெருக்க உறுப்புகளைச் சிதைப்பதற்கு எதிரான சர்வதேச தினம் | மகளிரின் பெண்ணுறுப்பைச் சிதைப்பதற்கு எதிரான ஐ.நா.வின் முயற்சிகள் |
| | இணையப் பாதுகாப்பு தினம் | "இணைப்பினை உருவாக்குங்கள் மற்றும் மதிப்பினை பகிருங்கள் : சிறந்த இணையம் உங்களிடம் இருந்தே தொடங்கட்டும்" |
| பிப்ரவரி 10 | தேசிய குடற்புழு நீக்க தினம் | 1-19 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளிலும் குடற்புழுத் தொற்றினைக் குணப்படுத்துவதற்கான முயற்சி |
| பிப்ரவரி 11 | தேசிய யுனானி தினம் | யுனானி மருத்துவ ஆய்வாளரான ஹக்கிம் அஜ்மல் கானின் பிறந்த தினம். |
| பிப்ரவரி 12 | தேசிய உற்பத்தித் திறன் | "தொழிற்சாலை 4.0 இந்தியாவுக்கான மாபெரும் வாய்ப்பு" |
| பிப்ரவரி 13 | உலக வானொலி தினம் | வானொலி மற்றும் விளையாட்டுகள் |
| பிப்ரவரி 18 | இராமகிருஷ்ண பரமஹம்சரின் 182-வது பிறந்த தினம் | இராமகிருஷ்ண பரமஹம்சரின் சமய மற்றும் ஆன்மீக சித்தாந்தங்கள் சக்தி, அத்வைத வேதாந்தம் மற்றும் சகிப்புத்தன்மை |
| பிப்ரவரி 20 | உலக சமூக நீதி தினம் | "முன்னேறும் தொழிலாளர்கள் : சமூக நீதிக்கான தேவை" |
| பிப்ரவரி 21 | சர்வதேச தாய்மொழி தினம் | "நீடித்த வளர்ச்சிக்கான மொழியியல் பன்முகத்தன்மை மற்றும் பன்மொழிப் பரவல் கணக்கீடு" |
| பிப்ரவரி 24 | மத்திய கலால் வரி தினம் | சரக்கு மற்றும் சேவைகளின் மீது விதிக்கப்படும் கலால் வரிக்கான தினம் |
| பிப்ரவரி 28 | தேசிய அறிவியல் தினம் | "நீடித்த வளர்ச்சிக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்" |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS